**தினத்தந்தி** 27 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்:

## 'பூத்' சிலிப் வழங்கும் பணி தொடங்கியது



ஈரோடு, ஜன.27-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5-ந்தேதி நடைபெற உள்ளது. தி.மு.க., நாம் தமிழர் கட்சி வேட்பாளர் உள்பட 46 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். தேர்தலை முன்னிட்டு மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா தலைமையில் பல்வேறு முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் கணினி சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யும் பணி, வாக்குச்சாவடிகள் தயார்படுத்தும் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகள் நடைபெறுகிறது: இதேபோல் தேர்தலில் வாக்குச்சாவடிகளில் பணியாற்ற உள்ள அலுவலர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

மேலும் தேர்தலுக்கு இன்னும் குறைவான நாட்களே உள்ளதால் தற்போது ஈரோடு கிழக்கு தொகுதி வாக்காளர்களுக்கு அங்கன்வாடி மற்றும் மாநகராட்சி ஊழியர்கள் சார்பாக 'பூத்' சிலிப் வழங்கும் பணியை நேற்று முன்தினம் முதல் தொடங்கி உள்ளனர். இவர்கள் ஒவ்வொரு வார்டிலும் உள்ள வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று அவர்களது வாக்காளர் அடையாள அட்டையை பரிசோதனை செய்து வாக்களிக்க செல்லும்போது எடுத்து செல்ல வேண்டிய 'பூத்' சிலிப்பை வழங்கி வருகின்றனர்.

Erode East Assembly Constituency By-election.
Distribution of Booth slip started.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 27 JAN 2025

தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனை:

# 5 பேரிடம் ரூ.9½ லட்சம் பறிமுதல்

ஈரோடு, ஜன.27-

ஈரோடு கருங்கல்பாளையம் காவிரி ரோட்டில் நிலை கண்காணிப்பு குழுவினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, அந்த வழியாக வந்த காரை அதிகாரிகள் தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். இதில் காரில் ரூ.1 லட்சம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. விசாரணையில் அவர், நாமக்கல் மாவட்டம் களத்துவலசு பகுதியை சேர்ந்த கார் உரிமையாளர் மதன் என்பதும், அவர் எடுத்து வந்த பணத்துக்கு உரிய ஆவணம் இல்லை என்பதும் தெரியவந்தது. இதைத்தொடர்ந்து அதிகாரிகள் ரூ.1 லட்சத்தை பறிமுதல் செய்தனர்.

ஈரோடு பி.பி.அக்ரஹாரம் பகுதியில் நிலை கண்காணிப்பு குழுவினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்தியூர் அருகே உள்ள தவுட்டுப்பாளையம் பகுதியை சேர்ந்த ராமன் என்பவர் உரிய ஆவணங்கள் இன்றி காரில் கொண்டு வந்த ரூ.2 லட்சத்து 50 ஆயிரத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதேபோல் பழையபாளையம் பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் காரில் திருப்பூர் மாவட்டம் கணியம்பூண்டி பகுதியை சேர்ந்த கவிதா ரூ.2 லட்சத்து 50 ஆயிரத்தையும், புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி பகுதியை சேர்த்த ஆசிக் முகமது என்பவரிம் வில்லரசம்பட்டியில் ரூ.2 லட்சத்து 90 ஆயிரத்தையும் பறிமுதல் செய்தனர்.

இது தவிர ஈரோட்டை சேர்ந்த சதாசிவம் என்பவரிடம் இருந்து ரூ.52 ஆயிரம் பறிமுதல் செய்யப்பட்டது. நேற்று முன்தினம் ஒரே நாளில் 5 பேரிடம் இருந்து மொத்தம் ரூ.9 லட்சத்து 42 ஆயிரம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

Flying squad checking.
9.5 Lakhs seized from 5 persons.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 27 JAN 2025



### தேர்தல் பறக்கும் படையினர்

## அமைச்சர் முத்துசாமி காரில் சோதனை

ஈரோடு, ஜன.27-

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5-ந்தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு கிழக்கு தொகுதியில் தி.மு.க. மற்றும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். தொகுதியில் தேர்தலை அமைதியாகவும் பாதுகாப்பாகவும் நடத்த தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஓட்டுக்காக வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் வழங்குவதை தடுக்க பறக்கும் படையினர், நிலைகண்காணிப்பு படையினர் தொடர் சோதனை நடத்தி வருகிறார்கள். ரூ.50 ஆயிரத்துக்கும் அதிகமாக உரிய ஆவணங்கள் இன்றி ரொக்கப்பணம் கொண்டுசெல்வது சோதனையில் தெரியவந்தால் பணம் பறிமுதல் செய்யப்பட்டு வருகிறது. இந்தநிலையில் நேற்று முன்தினம் இரவு ஈரோடு காந்திஜி ரோடு பெரியார் நகர் நுழைவுவாயில் பகுதியில் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அமைச்சர் முத்துசாமியின் கார் அந்த வழியாக வந்தது. அதனை தடுத்து நிறுத்திய பறக்கும் படையினர் காரை சோதனையிட்டனர். ஆனால் காரில் அமைச்சர் இல்லை. முழுமையான சோதனைக்கு பின்னர் கார் தொடர்ந்து செல்ல அனுமதித்தனர்.

Flying squad checked the minister Muthusamy's car.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 27 JAN 2025



ஈரோடு கிழக்கு தொகுதியில் அனுமதியின்றி பிரசாரம்:

# சீமான் மீது ஒரே நாளில் 4 வழக்குகள் பதிவு

ஈரோடு, ஜன.27-
ஈரோடு கிழக்கு தொகுதியில் அனுமதியின்றி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டதாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது ஒரே நாளில் 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## தேர்தல் பிரசாரம்

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5-ந்தேதி நடைபெற உள்ளது. இதில் நாம் தமிழர் கட்சி சார்பில் வேட்பாளர் சீதாலட்சுமி போட்டியிடுகிறார். இவரை ஆதரித்து கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஈரோட்டில் முகாமிட்டு தேர்தல் பிரசாரம் செய்து வருகிறார். 2-ம் நாளான நேற்று முன்தினம் ஈரோடு காளைமாட்டு சிலை அருகே பிரசாரத்தை தொடங்கி மரப்பாலம், கச்சேரி ரோடு, மண்டபம் வீதி உள்ளிட்ட பகுதிகளில் தெருமுனை கூட்டங்களில் பேசினார்.

இந்த நிலையில் தேர்தல் அதிகாரியிடம் அனுமதி பெறாமல் பிரசாரத்தில் ஈடுபட்டதாக சீமான் உள்ளிட்ட நிர்வாகிகள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளன. அதன்படி காளைமாட்டு சிலை அருகே பிரசாரம் செய்ததற்காக சீமான், வேட்பாளர் சீதாலட்சுமி உள்ளிட்ட 35 பேர் மீது தேர்தல் விதிமீறல், அதிகாரிகளை பணி செய்ய விடாமல் தடுத்தல் ஆகிய 2 பிரிவுகளின் கீழ் ஈரோடு சூரம்பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

## சட்டவிரோதமாக கூடுதல்

இதேபோல் மரப்பாலம் மற்றும் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனின் வீடு அருகே மண்டபம் வீதி ஆகிய இடங்க்ளில் அனுமதி பெறாமல் பிரசாரம் செய்தல், சட்டவிரோதமாக கூடுதல் உள்ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் சீமான் மற்றும் கட்சி நிர்வாகிகள் மீது ஈரோடு ட்வுன் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

மேலும் ஈரோடு பெரியார் நகரில் அனுமதி இன்றி பிரசாரம் செய்ததற்காக சீமான் உள்ளிட்ட 3 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் ஒரே நாளில் தேர்தல் விதி மீறியதாக சீமான் மற்றும் நாம் தமிழர் கட்சியினர் மீது ஒரே நாளில் 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

Erode East Assembly Constituency By-election.
4 cases filed on Seeman on a single day for campaigning without permission.

Scanned with OKEN Scanner

தினமலர் 27 JAN 2025

# ஈரோடு கிழக்கு தொகுதியில் ரூ.9 லட்சம் பறிமுதல் பறக்கும் படையினர் நடவடிக்கை

ஈரோடு, ஜன. 27-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, தேர்தல் அறிவித்த நாள் முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளது. மேலும் தேர்தல் நடைபெற இன்னும் குறைவான நாட்களே உள்ளது. இதையொட்டி வாக்காளர்களுக்கு பணம் ம்ற்றும் பரிசு பொருட்கள் கொடுப்பதை தடுக்கும் வகையில் 3 பறக்கும் படை, 3 நிலை கண்காணிப்பு குழுவினர் ஈரோடு கிழக்கு தொகுதி முழுவதும் தீவிர வாகன சோதனை மற்றும் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

உரிய ஆவணங்கள் இன்றி ரூ.50 ஆயிரத்துக்கு மேல் கொண்டு செல்லப் படும் பணத்தை பறிமுதல் செய்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று முன்தினம் கருங்கல்பாளையம், காவிரி ரோடு சத்யா எடை நிலையம் அருகே நிலை கண்காணிப்பு குழுவினர் அவ்வழியாக வந்த காரை நிறுத்தி சோதனை மேற்கொண்டனர். இதில் உரிய ஆவணங்களின்றி கொண்டு வரப்பட்ட ரூ. 1 லட்சத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

பின்னர் நடத்திய விசாரணையில் கார் உரிமையாளர் மதன் என்பதும், நாமக்கல் மாவட்டம் களத்துவலவு பகுதியை சேர்ந்தவர் என்பதும் தெரிய வந்தது. இதேபோன்று நிலை கண்காணிப்பு குழுவினர் பி.பெ. அக்ரஹாரத்தில் சோதனை மேற்கொண் டனர். அப்போது அவ்வழியாக வந்த காரில் சோதனை மேற்கொண்ட போது உரிய ஆவணங்களின்றி கொண்டு வரப்பட்ட ரூ.2.50 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. காரை ஓட்டி வந்தவர் ராமன், அந்தியூர் அடுத்த தவுட்டுப் பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்தது.

பழையபாளையம் பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் மேற் கொண்ட சோதனையில் உரிய ஆவணங்களின்றி காரில் கொண்டு வரப்பட்ட ரூ.2.50 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. காரை ஓட்டி வந்தவர் கவிதா என்பதும், திருப்பூர் மாவட்டம் கணியம்பூண்டியை சேர்ந்தவர் என்பதும் தெரியவந்தது.

நேற்று முன்தினம் இரவு 11.20 மணி அளவில் வில்லரசம்பட்டி பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக வந்த காரை நிறுத்தி சோதனை செய்த போது காரில் ரூ.2.90 லட்சம் பணம் இருந்தது தெரிய வந்தது. காரில் வந்தவரிடம் விசாரித்தபோது அவர் புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி பகுதியை சேர்ந்த ஆசிக் முகமது என்பது தெரிய வந்தது. அவரிடம் பணத்திற்குரிய ஆவணம் இல்லாததால் அந்த பணத்தை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

இதன்படி நேற்று முன்தினம் ஒரே நாளில் ரூ.9 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. ஈரோடு கிழக்கு தொகுதியில் இதுவரை ரூ.33 லட்சத்து 85 ஆயிரத்து 60 பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் உரிய ஆவணங்களை சமர்பித்ததால் இதுவரை ரூ.12 லட்சத்து 93 ஆயிரத்து 60 ரூபாய் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நெருங்கி வரும் சூழ்நிலையில் பறக்கும் படையினர் தங்கள் சோதனைகளை மேலும் தீவிரப்படுத்தி வருகின்றனர். கடந்த 2 நாட்களாக ஈரோடு கிழக்கு தொகுதி பகுதிகளில் வரும் இருசக்கர வாகனங்களையும் முழுமையாக சோதனை செய்து வருகின்றனர். இதனால் வாகன ஓட்டிகள் அவதி அடைகின்றனர்.

Flying squad seized Rs.9 Lakhs in Erode East Assembly Constituency.

Scanned with OKEN Scanner

தினமலர் 27 JAN 2025

# தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாக சீமான் மீது 3 வழக்குகள் பதிவு

ஈரோடு, ஜன.27-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலை ஒட்டி திமுக, நாம் தமிழர் கட்சி மற்றும் சுயேச்சை வேட்பாளர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமியை ஆதரித்து அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப் பாளர் சீமான் ஈரோட்டில் தங்கி பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார். இந்நிலையில் நேற்று முன்தினம் 2வது நாளாக காளை மாட்டு சிலை, மரப் பாலம், கச்சேரி வீதி ஆகிய பகுதிகளில் திறந்தவெளி வாகனத்தில் நின்றபடி பொதுமக்களிடம் வாக்கு கேட்டார்.

இந்நிலையில் காளை மாட்டு சிலை பகுதியில் நாம் தமிழர் கட்சியினர் தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாக வேட்பாளர் சீதாலட்சுமி உட்பட 37 பேர் மீது பறக்கும் படை அதிகாரிகள் அளித்த புகாரின் பேரில் சூரம்பட்டி போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். இதேபோல் மரப்பாலம் பகுதியில் உரிய அனுமதியில்லாமல் பிரச்சாரம் மேற்கொண்டதாக சீமான் உட்பட 8 பேர் மீது தேர்தல் விதிகளை மீறியதாக ஈரோடு டவுன் போலீஸ் ஸ்டேஷனில் பறக்கும் படை அதிகாரிகள் கொடுத்த புகாரின் பேரில் டவுன் போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

மேலும், கச்சேரி வீதியில் உரிய அனுமதி பெறாமல் தெருமுனை கூட்டத்தில் பிரச்சாரம் மேற்கொண்டதாக சீமான் உட்பட 6 பேர் மீது ஈரோடு டவுன் போலீஸ் ஸ்டேஷனில் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இதன் மூலம் நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது 2 போலீஸ் ஸ்டேஷன்களில் 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3 Cases filed on Seeman for violating ECC.

Scanned with OKEN Scanner

தினகரன் 27 JAN 2025

## ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# 1,194 அலுவலர்களுக்கு இன்று 2ம் கட்ட பயிற்சி

ஈரோடு, ஜன.27: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலையொட்டி வாக்குச்சாவடி அலுவலர்கள் 1,194 பேருக்கு இன்று 2ம் கட்ட பயிற்சி வழங்கப்படுகிறது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வரும் பிப்ரவரி 5ம் தேதி நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை 8ம் தேதி நடக்கிறது. தேர்தலில் திமுக சார்பில் வி.சி. சந்திரகுமார், நாதக சார்பில் சீதாலட்சுமி உள்பட 46பேர் களத்தில் உள்ளனர். வேட்பாளர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



ஈரோடு மாநகராட்சி கூட்டரங்கில் அனைத்து கட்சியினர் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் ரேண்டம் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யும் பணியை பொது பார்வையானர் அஜய் குமார் குப்பை நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

தபால் வாக்களிக்க, முதியோர், மாற்றுத்திறனாளிகள் என 256 பேர் பதிவு செய்திருந்த நிலையில், அவர்களுக்கான வாக்குப்பதிவு கடந்த 23ம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. இவர்களுக்கு இன்றுடன் (27ம் தேதி) வாக்குப்பதிவு செய்வது நிறைவடைகிறது.

இந்நிலையில், கிழக்கு தொகுதியில் தேர்தலுக்காக அமைக்கப்பட்ட 237 வாக்குச்சாவடிகள், கூடுதலாக 20 சதவீதம் வாக்குச்சாவடிகள் சேர்த்து 284 முதன்மை அலுவலர், முதல் நிலை அலுவலர், 2ம் நிலை அலுவலர், 3ம் நிலை அலுவலர்கள் மற்றும் 1,200 வாக்காளர்களை கொண்ட வாக்குச்சாவடிகளுக்கு கூடுதலாக 58 நான்காம் நிலை அலுவலர்கள் என 1,194 அலுவலர்கள் பணியாற்ற உள்ளனர்.

இவர்களுக்கு கடந்த 19ம் தேதி முதற்கட்ட பயிற்சி வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு ஈரோடு ரங்கம்பாளையத்தில் உள்ள ஆர்ஏஎன்எம் கலை அறிவியல் கல்லூரியில் 2ம் கட்ட பயிற்சி இன்று (27ம் தேதி) வழங்கப்பட உள்ளது. இவர்களுக்கு, மண்டல அலுவலர்கள் பயிற்சி அளிக்க உள்ளனர்.

Erode East Assembly Constituency By-election.
2nd Phase election training for 1194 polling officials.

Scanned with OKEN Scanner

தினகரன்
27 JAN 2025




▶ ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கு கூடுதலாக ஒதுக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் ஸ்ட்ராங் ரூமுக்கு கொண்டு செல்லப்பட்டன.

# வாக்குப்பதிவு இயந்திர அறைக்கு கூடுதல் பாதுகாப்பு

ஈரோடு, ஜன. 27: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள பாதுகாப்பு அறையில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

வாக்குப்பதிவுக்கு ஒரு நாளுக்கு முன்பாக இங்கிருந்துதான் மண்டல வாரியாக பிரித்து வாக்குப்பதிவு இயந்திரங்கள் கொண்டு செல்லப்படும். அதாவது, தேர்தல் பார்வையாளர் முன்னிலையில் பாதுகாப்பு அறை திறக்கப்பட்டு இயந்திரங்கள் எடுக்கப்படும். இவை, வாக்குச்சாவடி அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டு தேர்தலுக்கான தயாரிப்பு பணிகள் செய்யப்படும். பின்னர் ஒவ்வொரு மண்டல வாரியாக பிரித்து, போலீசார் பாதுகாப்புடன் இயந்திரங்கள் எடுத்துச் செல்லப்படும்.



இந்நிலையில், ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறை இருக்கும் பகுதியில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

ஏற்கனவே, அப்பகுதி சிசிடிவி மூலம் கண்காணிக்கப்பட்டு வரும் நிலையில், பாதுகாப்பு அறைக்கு முன்பாக, மரத்திலான தடுப்புகள் போடப்பட்டுள்ளது.

மேலும் சுழற்சி முறையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

Additional EVMs transported to Strong room in Erode Corporation Office.
Additional security force arranged.

Scanned with OKEN Scanner

தினகரன் 27 JAN 2025

### ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# பூத் சிலிப் வழங்கும் பணி துவக்கம்

ஈரோடு, ஜன.27: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. இதில், திமுக, நாம் தமிழர் கட்சி, அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின வேட்பாளர்கள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் என 46 பேர் போட்டியிடுகின்றனர்.

இத்தேர்தலையொட்டி மாவட்ட தேர்தல் நடத்தும் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா தலைமையில், தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் மற்றும் அலுவலர்கள் தேர்தலுக்கான முன்னேற்பாடு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன்படி, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கணினி சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யும் பணி, வாக்குச்சாவடிகள் தயார்படுத்தும் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தலில் வாக்குச் சாவடி மையங்களில் பணியாற்றும் அலுவலர்களுக்கும் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கும் பணி தொடங்கியுள்ளது.

இப்பணியை மாநகராட்சி ஊழியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்கள் ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட ஒவ்வொரு வார்டிலும் உள்ள வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று அவர்களது வாக்காளர் அடையாள அட்டையை பரிசோதித்து, அவர்கள் வாக்களிக்கும் போது எடுத்துச் செல்ல வேண்டிய பூத் சிலிப்பை வழங்கி வருகின்றனர்.

Erode East Assembly Constituency By-election.
Distribution of Booth slip started.


Scanned with OKEN Scanner

தினகரன்
2 7 JAN 2025

# அமைச்சர் முத்துசாமி காரை தடுத்து பறக்கும் படையினர் தீவிர சோதனை

ஈரோடு, ஜன. 27: ஈரோடு இடைத்தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட அமைச்சர் சு.முத்துசாமியின் காரை தடுத்து நிறுத்தி தேர்தல் பறக்கும் படையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

ஈரோடு கிழக்கு சட்டமன்றதொகுதி இடைத்தேர்தலில் திமுக வேட்பாளராக உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் வி.சி.சந்திரகுமாருக்கு ஆதரவு தெரிவித்து தமிழ்நாடு வீட்டு வசதித்துறை அமைச்சர் மணல் மேடு, கிராமடை, டீசல் செட், சென்னிமலை சாலை உள்ளிட்ட பகுதிகளில் பிரசாரம் செய்தார். பின்னர், தேர்தல் பிரசாரத்தை முடித்து கொண்டு, அவரது காரில் முகாம் அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்தார். பெரியார் நகர் வளைவு அருகே வந்தபோது அமைச்சர் சு.முத்துசாமியின் கார் மற்றும் அவரை பின் தொடர்ந்து வந்த திமுக விவசாய அணியின் இணை செயலாளர் குறிஞ்சி சிவக்குமார் ஆகியோரின் காரை தேர்தல் பறக்கும் படையினர் தடுத்து நிறுத்தி திடீர் சோதனை மேற்கொண்டனர்.



ஈரோடு இடைத்தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட அமைச்சர் சு.முத்துசாமியின் காரை தடுத்து நிறுத்தி தேர்தல் பறக்கும் படையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

இந்த சோதனைக்கு அமைச்சரும், திமுக நிர்வாகிகளும் முழு ஒத்துழைப்பு அளித்தனர். இதையடுத்து வழக்கமாக பறக்கும் படையினர் எவ்வாறு சோதனை நடத்துவார்களோ அதேபோல் காரின் அனைத்து பகுதிகளிலும் விர சோதனை நடத்தினர். ஆனால், காரில் பணமோ, பரிசு பொருட்களோ இல்லாததால் பறக்கும் படையினர் காரை தொடர்ந்து செல்ல அனுமதித்தனர். தேர்தல் பறக்கும் படையினர் அமைச்சர் கர்ரையே தடுத்து நிறுத்தி சோதனை செய்ததால் அப்பகுதி சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

Flying squad checked the minister Muthusamy's car.

Scanned with OKEN Scanner

தினகரன் 27 JAN 2025

# சீமான் மீது 4 வழக்கு நாதக வேட்பாளர் மீது 6 வழக்குகள்

ஈரோடு, ஜன. 27: ஈரோட்டில் தேர்தல் விதிமுறை மீறி பிரசாரம் மேற்கொண்ட சீமான் மற்றும் நாதக வேட்பாளர் மீது இதுவரை 10 வழக்குகள் ப்திவு செய்யப்பட்டுள்ளன.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் நாதக வேட்பாளர் சீதாலட்சுமி போட்டியிடுகிறார். இவரும், அக்கட்சியை சேர்ந்தவர்களும், தேர்தல் நடத்தை மீறியதாகவும், அனுமதியின்றி கட்சிக்கொடி, பேனர்கள் பயன்படுத்தியதாகவும் கூறி ஏற்கனவே கருங்கல்பாளையம், ஈரோடு டவுன், தெற்கு ஆகிய போலீஸ் ஸ்டேஷன்களில் 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நாதக வேட்பாளர் சீதாலட்சுமியை ஆதரித்து, அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

ஈரோடு மரப்பாலம், மண்டபம் வீதி பகுதிகளில், நேற்று முன்தினம் பிர்சாரத்திற்கு உரிய அனுமதி பெறாமலும், அனுமதியின்றி கட்சி கொடிகள், பேனர்கள் வைத்துள்ள்னர். அனுமதி பெறாமல் சீமான் பிரசாரம் மேற்கொண்டார். மாலையில் ஈரோடு பெரியார் நகர், காளைமாடு சிலை பகுதியிலும், தேர்தல் நடத்தை விதிமுறை மீறி சீமான் பிரசாரம் செய்துள்ளார். இதனையடுத்து, தேர்தல் நடத்தை விதிமுறை மீறியதாக, தேர்தல் பறக்கும் படையினர் அளித்த புகாரின் அடிப்படையில், டவுன் போலீசார் 3 வ்ழக்குகள், ஈரோடு தெற்கு போலீசார் ஒரு வழக்கு என சீமான் மீது 4 வ்ழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே, ஈரோடு காளைமாடு சிலை அருகே உரிய அனுமதி பெறாமல், கட்சி கொடி, பேனர்கள், ஒலி பெருக்கிகள் வைத்து பிரசாரம் செய்ததாக வேட்பாளர் சீதாலட்சுமி உள்ளிட்ட 37 பேர் மீது தெற்கு போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இதுவரை சீமான் மீது 4 வழக்குகள், வேட்பாளர் சீதாலட்சுமி மீது 6 வழக்குகள் என 10 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

4 Cases filed on Seeman.
6 Cases filed on NTK candidate.

Scanned with OKEN Scanner

தினகரன் 27 JAN 2025

### தேர்தல் நடத்தை விதிமீறல்

# ரூ.2.90 லட்சம் பறிமுதல்

ஈரோடு, ஜன.27: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வரும் 5ம் தேதி நடைபெறுகிறது. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட 7ம் தேதி முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தன. அதன்படி. வாக்காளர்களுக்கு பரிசுப் பொருட்கள், பணம் உள்ளிட்டவைகளை கொடுப்பதை தடுக்கும் வகையில், பறக்கும் படை அலுவலர்கள் குழு மற்றும் கண்காணிப்பு நிலைக்குழுவினர் உரிய தீவிர வாகனத் தணிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி உரிய ஆவணங்களின்றி ரூ.50 ஆயிரத்துக்கும் மேலாக எடுத்துச் செல்லப்படும் தொகைகள் பறிமுதல் செய்யப்பட்டு, தேர்தல் கட்டுப்பாடு பிரிவு மூலமாக மாவட்ட கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் தேர்தல் பறக்கும் படை அலுவலர் சண்முகம் தலைமையிலான குழுவினர், வில்லரசம்பட்டி நால்ரோட்டில் நேற்று முன்தினம் நள்ளிரவு வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக வந்த கார் ஒன்றை தடுத்து நிறுத்தி சோதனையிட்டனர்.

காரில் 2 லட்சத்து 90 ஆயிரம் ரூபாயம் எடுத்து வந்தது தெரிய வந்தது. விசாரணையில் காரில் வந்தவர் புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி, அப்துல்ஹமீது வீதியைச் சேர்ந்த ஆஷிக்முகமது என்பதும், தொழில் சம்பந்தமாக பணத்தை எடுத்து வந்ததும் தெரியவந்தது. ஆனால், அந்தப் பணத்துக்கு உரிய ஆவணங்கள் எடுத்து வரப்படவில்லை. இதையடுத்து பணத்தை பறிமுதல் செய்த தேர்தல் பறக்கும் படை அலுவலர் சண்முகம், தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் ஒப்படைத்தார். பின்னர் அந்தத் தொகை மாவட்ட கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அறிவிக்கப்பட்ட 7ம் தேதி முதல் நேற்று காலை வரை உரிய ஆவணங்களின்றி எடுத்துவரப்பட்ட ரூ.34 லட்சத்து 85 ஆயிரத்து 60ஐ தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்திருந்தனர். அதில், உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து ரூ.12 லட்சத்து 93 ஆயிரத்து 60 உரியவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ரூ.15 லட்சத்து 83 ஆயிரத்து 60 மாவட்ட கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

Violation of ECC.
2.90 Lakhs seized.

Scanned with OKEN Scanner

தினமணி 27 JAN 2025

# சீமான், நாதக வேட்பாளர் மீது வழக்குப் பதிவு

ஈரோடு, ஜன. 26: ஈரோடு கிழக்கு தொகுதியில் பிரசாரம் செய்து வரும் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், வேட்பாளர் மா.கி.சீதாலட்சுமி உள்ளிட்டோர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் நாதக வேட்பாளராக சீதாலட்சுமி போட்டியிடுகிறார். கடந்த சில நாள்களாக அனுமதியின்றி பிரசாரம் மேற்கொண்டதாக அவர் மீதும், அவரது கட்சியினர் மீதும் 5-க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், அவரை ஆதரித்து அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் 2-ஆவது நாளாக சனிக்கிழமை பிரசாரம் செய்தார். அப்போது ஈரோடு, மரப்பாலம் பகுதியில் அனுமதி பெறாமல் பிரசாரம் செய்து தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாக சீமான் உள்ளிட்ட 7 பேர் மீதும், அதேபோல மண்டபம் வீதி சந்திப்பு பகுதியில் தேர்தல் விதிகளை மீறியதாக சீமான் உள்ளிட்ட 5 பேர் மீதும் ஈரோடு டவுன் போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

மேலும் ஈரோடு, காளை மாடு சிலை அருகே அனுமதி பெறாமல் கட்சிக் கொடி, பேனர்கள், ஒலிபெருக்கி வைத்து பிரசாரம் செய்ததாக வேட்பாளர் சீதாலட்சுமி உள்பட 37 பேர் மீது ஈரோடு தெற்கு போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

Case filed Seeman and NTK candidate.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 27 JAN 2025

# 19,172 பேருக்கு வாக்காளர் ஐ.டி.,

**ஈரோடு, ஜன. 27–**

ஈரோடு மாவட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட மற்றும் ஏற்கனவே வாக்காளர் அடையாள அட்டை வைத்து, புதுப்பித்தோர் என, 49,295 பேருக்கு புதிய வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் கடந்த, 6ல் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. எட்டு சட்டசபை தொகுதிகளில், 19 லட்சத்து, 77,419 வாக்காளர்கள் உள்ளனர். புதிதாக, 35,855 பேர் வாக்காளர்களாக சேர்க்கப்பட்டனர்.

இவர்களுடன் ஏற்கனவே வாக்காளர் அடையாள அட்டை பெற்று, முகவரி, போட்டோ, தொடர்பு எண் உள்ளிட்ட விபரங்களை மாற்றம் செய்தவர்களுக்கும் புதிய வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட உள்ளது. இதன்படி மொத்தம், 49,295 வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட உள்ளது.

இதில் முதற்கட்டமாக, 19,172 பேருக்கு புதிய அடையாள அட்டை தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ளவர்களுக்கு படிப்படியாக வழங்கப்படும். இதில், ஈரோடு கிழக்கு தொகுதியில் மட்டும் புதிதாக இணைந்த புதிய வாக்காளர்கள் மற்றும் ஏற்கனவே அடையாள அட்டை வைத்திருந்து திருத்தம் மேற்கொண்டவர்கள் என, 1,500 பேருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

New Voter ID for 19172 people.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 27 JAN 2025

# பறக்கும் படையினர் ரூ.2.90 லட்சம் பறிமுதல்

ஈரோடு, ஜன. 27-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் நேற்று முன்தினம் இரவு, கருங்கல்பாளையம் பகுதியில் பறக்கும் படை அதிகாரி பிரபாகரன் தலைமையில் வாகன தணிக்கை செய்தனர்.

ஈரோட்டை சேர்ந்த சதாசிவம் என்பவரிடம், 52,000 ரூபாயை ஆவணங்கள் இல்லாததால், பறிமுதல் செய்தனர். பறக்கும் படை அதிகாரி சண்முகம் தலைமையிலானவர்கள் நேற்று காலை நடத்திய வாகன தணிக்கையில், புதுக்கோட்டை, அறந்தாங்கியை சேர்ந்த ஆசிக் முகம்மது காரில் கொண்டு வந்த, 2.90 லட்சம் ரூபாயை, உரிய ஆவணங்கள் இல்லாததால் பறிமுதல் செய்தனர்.

Flying squad checking.
2.90 Lakhs seized.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 27 JAN 2025

# சீமான் மீது மேலும் இரு வழக்குகள் பதிவு

**ஈரோடு, ஜன. 27–**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான், பிரசாரத்தில் ஈடுபட்டார். மரப்பாலம், மண்டபம் வீதி பகுதிகளில் நடத்தை விதிமீறி பிரசாரம் செய்ததாக இரு வழக்குகளை டவுன் போலீசார் பதிவு செய்திருந்தனர்.

இந்நிலையில் ஈரோடு பெரியார் நகரில் தேர்தல் நடத்தை விதிமீறியதாக, டவுன் போலீசாரும், ஈரோடு காளை மாட்டு சிலை பகுதியில் விதிமீறி பிரசாரம் செய்ததாக, சூரம்பட்டி போலீசாரும் நேற்று வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

Two more cases filed on Seeman.

Scanned with OKEN Scanner

தமிழ் முரசு 26 JAN 2025

ஈரோட்டில் தேர்தல் விதிமுறை மீறி பிரசாரம்

# நாதக வேட்பாளர், சீமான் உட்பட 37 பேர் மீது வழக்கு

ஈரோடு, ஜன. 26-
ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை யொட்டி நடந்த பிரசாரத்தின் போது தேர்தல் விதிமீறியை நாதக வேட்பாளர் சீதாலட்சுமி மற்றும் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்பட 37 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி எம்எல்ஏ ஈபிகேஎஸ் இளங்கோவன் உயிரிழந்ததையடுத்து இத்தொகுதிக்கு இடைத்தேர்தல் வரும் 5ம் தேதி நடைபெற உள்ளது. நாதகவேட்பாளராக சீதாலட்சுமி போட்டியிடுகிறார். இவர் கடந்த சில நாட்களாக போலீசாரிடம் அனுமதி பெறாமல் பிரசாரம் மேற்கொண்டதாக அவர் மீதும், அவரது கட்சியினர் மீது 5க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில், நாதக வேட்பாளரை ஆதரித்து அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று 2வது நாளாக பிரசாரம் செய்தார்.


அப்போது, ஈரோடு, மரப்பாலம் நால்ரோடு பகுதியில் உரிய அனுமதி பெறாமல் தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாக சீமான் உள்ளிட்ட 7 பேர் மீதும். அதேபோல, மண்டபம் வீதி சந்திப்பு பகுதியில் தேர்தல் விதிகளை மீறியதாக சீமான் உள்ளிட்ட 5 பேர் மீதும் ஈரோடு டவுன் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

மேலும்;ஈரோடு, காளை மாட்டு சிலை அருகே உரிய அனுமதி பெறாமல் கட்சி கொடி, பேனர்கள், ஒலி பெருக்கி வைத்து பிரசாரம் செய்ததாக வேட்பாளர் சீதாலட்சுமி உள்ளிட்ட 37 பேர் மீதும் ஈரோடு தெற்கு போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

Case filed on 37 people including Seeman and NTK candidate for violating ECC in By-election campaign in Erode.

Scanned with OKEN Scanner

தமிழ் முரசு 2 6 JAN 2025



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வரும் 5ம் தேதி நடக்கிறது. இதற்காக கூடுதலாக ஒதுக்கப்பட்ட வாக்கு பதிவு இயந்திரங்கள் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள இருப்பு அறைக்கு கொண்டு செல்லப்பட்டன.

Additional EVMs transported to Strong room in Erode Corporation Office.

Scanned with OKEN Scanner